பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 07 2025 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. **Trinidad – Tobago**-வில் உள்ள ஆறாவது தலைமுறை இந்திய வம்சாவளியினருக்கும், வெளிநாடுவாழ் இந்திய குடியுரிமை அட்டை வழங்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

2. நாட்டின் எல்லையில் அத்துமீறுவோருக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

3. கிராமப்புற தூய்மை இயக்கத்தை வலுப்படுத்துவதற்கு **Swachh Survekshan Grammeen** செல்போன் செயலியில் கருத்துகளை பதிவிடுமாறு மத்திய நீர்வளத்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

4. தேசிய ஓய்வூதியத் திட்டத்திற்கான வரிச்சலுகைகள், ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்திற்கும் வழங்கப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

5. இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

--இனி விரிவான செய்திகள்--

**<<<<<<>>>>>**

**Trinidad – Tobago** -வில் உள்ள ஆறாவது தலைமுறை இந்திய வம்சாவளியினருக்கும், வெளிநாடுவாழ் இந்திய குடியுரிமை அட்டை வழங்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

**Trinidad – Tobago**-பயணத்தின்போது இந்திய வம்சாவளியினரிடையே தாம் ஆற்றிய உரையை உலகம் முழுவதிலும் உள்ள 35 மில்லியன் இந்திய மக்களுக்கு சமர்ப்பிப்பதாக அவர் கூறியுள்ளார்.

இந்தியாவின் யுபிஐ டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை திட்டத்தை ஏற்றுக்கொண்ட முதல் கரீபியன் நாடு என்ற பெருமையை **Trinidad – Tobago** பெற்றுள்ளதையும் அவர் தமது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி அடுத்தக்கட்டமாக அர்ஜென்டினா பயணம் மேற்கொள்கிறார்.

அந்நாட்டு அதிபர் **Javier Milei** -யின் அழைப்பின்பேரில் அங்கு செல்லும் பிரதமர், இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

**<<<<<<>>>>>**

**Trinidad – Tobago** -வில் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு, உலக அரங்கில் வளர்ந்துவரும் இந்தியாவின் நன்மதிப்பிற்கு சான்றாக திகழ்கிறது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

**Trinidad – Tobago** - சென்ற பிரதமர் திரு நரேந்திர மோடியை, போர்ட் ஆஃப் ஸ்பெயினில், அந்நாட்டு பிரதமர் **Kamala Persas Bissessar,** 38 அமைச்சர்கள் மற்றும் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வந்திருந்து வரவேற்றதை டாக்டர் எல். முருகன் நெகிழ்ச்சியுடன் தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

**<<<<<<>>>>>**

இந்திய எல்லையில் அத்துமீறுவோருக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புனேயில் உள்ள தேசிய பாதுகாப்பு அகாடமியில் மராத்திய பேரரசர் **Peshwa Bajirao** சிலையை திறந்துவைத்து பேசிய அவர், புனேயில் உள்ள தேசிய பாதுகாப்பு பயிற்சிக்கழகம், நாட்டின் முப்படைகளை வழிநடத்தி செல்லும் தீரம்மிக்க ராணுவ அதிகாரிகளை உருவாக்கும் அரும்பணியை செய்து வருவதாக கூறினார்.

மாறிவரும் சூழலுக்கு ஏற்ப போர் அணுகுமுறையிலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறினார்.

தேசப்பற்று, அர்ப்பணிப்பு மற்றும் தியாக உணர்வோடு அதிகாரிகளை தயார் படுத்தும் பணியையும் தேசிய பாதுகாப்பு பயிற்சிக்கழகம் உருவாக்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இப்பயிற்சிக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள மராத்திய பேரரசர் **Peshwa Bajirao**-வின் திருவுருவச்சிலை அதிகாரிகள் நாட்டுக்காக சேவையாற்ற வேண்டும் என்ற ஊக்கத்தை அளிக்கும் என்றும் அவர் கூறினார்.

அவரை போன்ற பழம்பெரும் தலைவர்களின் நடவடிக்கைகளை நமது இளம் வீரர்கள் அறிந்துகொண்டால், அது அவர்களுக்கு உத்வேகம் அளிப்பதுடன், நமது நாட்டின் எல்லைகள், தலைமுறைகள் கடந்து பாதுகாப்பாக இருக்கும் என்றும் திரு அமித் ஷா நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ஞாயிறு தோறும் சைக்கிள் பயணம் இயக்கத்தில் வரும் ஞாயிறன்று நாடு முழுவதும் ஆறாயிரம் இடங்களில் சைக்கிள் பயணம் நடைபெற இருப்பதாக மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

30-ஆவது சைக்கிள் பயணத்தையொட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்தியாவை சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் உடல் பருமன் பாதிப்பு இல்லாத நாடாக உருவாக்கும் நோக்கில் நடைபெறும் இந்த சைக்கிள் பயணத்தில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்க இருப்பதாக கூறியுள்ளார்.

ஞாயிறு தோறும் சைக்கிள் பயணம் இயக்கம், தற்போது மக்கள் இயக்கமாக மாறி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்கள் அனைவரும் இதில் பங்கேற்று, வாழ்க்கை முறை காரணமாக ஏற்படும் நோய்களை தவிர்க்கும் வகையில், சைக்கிள் மற்றும் யோகா பயிற்சிகளை மேற்கொள்ளுமாறும் திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>

கிராமப்புற தூய்மை இயக்கத்தை வலுப்படுத்துவதற்கான தூய்மை கணக்கெடுப்பு இயக்கத்தின்கீழ், **Swachh Survekshan Grammeen** செல்போன் செயலி மூலமாக ஆக்கப்பூர்வமான கருத்துக்களை பல்வேறு தரப்பினரும் தெரிவிக்குமாறு மத்திய நீர்வளத்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, அந்த அமைச்சகத்தின் செயலர் திரு அசோக் கே கே மீனா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வரும் ஆகஸ்ட் மாத இறுதிவரை மூத்த குடிமக்கள், இளைஞர்கள் மற்றும் கிராமப்புறங்களின் நலனுக்காக செயல்படுவோர் தங்களது கருத்துக்களை பதிவிடலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

கிராமப்புறங்களில் நவீன கழிப்பிட வசதி, திடக்கழிவு மேலாண்மை, திரவ கழிவு மேலாண்மை மற்றும் கிராமப்புற சுகாதாரத்தை மேம்படுத்துவற்கான திட்டங்கள் குறித்தும் அரசுக்கு இந்த செயலி மூலம் தெரிவிக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

கிராமப்புற மக்கள் எந்த அளவு அரசின் திட்டங்கள் மூலம், தூய்மையான மற்றும் சுகாதாரமான சூழலை பெற்றுள்ளார்கள் என்பது குறித்து பல்வேறு தரப்பினரும் அரசுக்கு அளிக்கும் தகவல்கள் கிராமப்புற தூய்மை குறித்த கணக்கெடுப்புக்கு பெரிதும் உதவிடும் என்றும் திரு அசோக் கே கே மீனா வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

தேசிய ஓய்வூதியத் திட்டத்திற்கான வரிச்சலுகைகள், அண்மையில் கொண்டுவரப்பட்ட ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்திற்கும் வழங்கப்படும் என்று மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஓய்வுபெறும் மத்திய அரசு ஊழியர்களுக்கு வெளிப்படைத்தன்மையுடன் வரிச்சலுகைகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது **NPS** தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் உள்ளவர்கள் ஒருங்கிணைந்த ஓய்வுதியத்திட்டத்திற்கு மாறினாலும் வரிச்சலுகைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை உருவாகியிருப்பதாகவும் மத்திய நிதியமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>

2026-ஆம் ஆண்டு ஹஜ் பயணத்திற்கான விண்ணப்பங்களை இன்னும் ஒருவாரத்திற்குள் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற ஹஜ் பயண ஆய்வுக்கூட்டத்திற்குபின் இதை தெரிவித்த அமைச்சர், இதற்கான படிவங்களில் தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

ஹஜ் பயணம் மேற்கொள்ளும் ஆண், பெண் இருபாலரையும் தனித்தனியாக தங்க வைப்பதற்கு உரிய ஏற்பாடுகளை செய்துதருவதற்கான முயற்சிகளையும் மத்திய அரசு எடுத்து வருவதாக திரு கிரண் ரிஜிஜு கூறினார்.

<<<<<<>>>>>

இந்திய ரிசர்வ் வங்கி ஒரு லட்சத்து 10 கோடி ரூபாயை வங்கி புழக்கத்திலிருந்து திரும்பப்பெற்றது.

வங்கிகள் ரிசர்வ் வங்கிக்கு செலுத்தும் தொகைக்கான ஏழு நாள் மாறக்கூடிய வட்டி விகித ஏலத்தின் அடிப்படையில் ரிசர்வ் வங்கி இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

<<<<<<>>>>>

மத்திய அரசின் பல்கலைக்கழகங்களில் சேருவதற்கான **CUET** நுழைவுத்தேர்வு முடிவுகள் இன்று அறிவிக்கப்பட்டுள்ளன.

**'cuet.nta.nic.in'** என்ற இணையதளத்தின் மூலமாக இதனை அறிந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தின் நாமக்கல் அரசு சட்டக்கல்லூரியில் தேசிய நாட்டு நலப்பணி திட்டத்தின் சார்பில் நடைபெற்ற யோகாசனா பயிற்சி முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் பங்கேற்று பயன்பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கல்வியாளர் திரு அருள்நிதி உதயகுமார், உடல் மற்றும் மனநலத்தை மேம்படுத்த யோகாசன பயிற்சியை மாணவர்கள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte - அருள்நிதி உதயகுமார் -40 Sec.)***

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

பர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மூன்றாவது நாளான இன்று தனது முதல் இன்னிங்சை தொடர்ந்து ஆடிவரும் இங்கிலாந்து சற்றுமுன்வரை 301 விக்கெட் இழப்பிற்கு 5 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக, இந்தியா தனது முதல் இன்னிங்சில் 587 ரன் எடுத்தது.

---------------

ரொமேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரியா பாட்டியா – புருண்டியின் **Sada Nahimana** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-3 என்ற செட் கணக்கில், இந்தியாவின் ருதுஜா போஸ்லே – சீனாவின் **Zheng** இணையை வென்றது.

-------------

கனடா ஓபன் பேட்மிண்டன் போட்டியின், மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில், இந்தியாவின் **Shriyanshi Valli Shetty** இன்று டென்மர்க்கின் **'Amalie Schulz '**-ஐ எதிர்கொள்கிறார்.

---------------

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3-வது மகளிர் ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

ஓவல் மைதானத்தில் இப்போட்டி இன்றிரவு மணி 11.05-க்கு தொடங்குகிறது.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரில் இந்தியா இரண்டு ஆட்டங்களில் வெற்றிபெற்று முன்னிலையில் உள்ளது.

<<<<<<>>>>>